அருணாவின்

# தமாஸ்தா

VENDHAN

அருணா பிலிம்ஸாரின் இரண்டாவது வெளியீடு

# குமாஸ்தா

திரைக்கதை .... ஆசார்ய ஆத்ரேயா
வசனம் .... A. T. கிருஷ்ணசாமி B. A.,
பாட்டு .... A. மருதகாசி, S. D. S. யோகியார்
சங்கீதம் .... C. N. பாண்டுரங்கம், G. ராமனாதன், நாகையா
நாட்டியம் .... மாதவன்
ஆர்ட் டைரக்டர் .... கோட்கான்கர்
ஆர்டிஸ்ட் .... லோகநாதன்
ஸெட்டிங் மாஸ்டர் .... பெருமாள் ராஜு
மேக்கப் .... K. முகுந்த குமார்
ஸ்டில் .... R. N. நாகராஜ ராவ்
போட்டோகிராபி .... R. M. கிருஷ்ணசாமி
ஆபரேடிவ்காமிராமென் - C. மது சூதன்
ஆடியோ கிராபி .... M. ராதா கிருஷ்ணன்
ரிகார்டிங் .... C. P. கன்னியப்பன், விஸ்வனாதன் B. SC.
எடிட்டிங் .... P. V. மாணிக்கம், பால் G- யாதவ்
பின்னணி சங்கீதம் .... A. M. ராஜா, P. லீலா, M. L. வஸந்த குமாரி

**உதவி**

டைரக்ஷன் .... K. C. கிருஷ்ணமூர்த்தி
போட்டோகிராபி .... பானு
எடிட்டிங் .... K. சத்யம்
நிர்வாகம் .... K. V. உமாபதி, R. M. பார்த்தசாரதி
உடைகள் .... வெங்கட்ராவ்
மேக்கப் .... பாலகிருஷ்ணன்
ப்ரோஸஸிங் .... விஜயா லாபரேடரி
ஸ்டுடியோ .... பிலிம் சென்டர் லிமிடெட்

R. C. A. சவுண்டு ஸிஸ்டம்

தயாரிப்பு .... **V. C. சுப்புராமன்**

R.A.F

உ

# குமாஸ்தா

## கதைச் சுருக்கம்.

நடுத்தர வகுப்பாரின் பொருளாதார நிலை எப்போதுமே துக்ககரமானது. அதிலும், பெருங்குடும்பியாயிருந்தாலோ, சொல்லுவது சாத்தியமல்ல.

ரங்கனுதன் ஒரு நாணயமும் ஒழுங்குமுள்ள ''குமாஸ்தா'' அவனுக்கு மனைவி ஸீதா, இரு குழந்தைகள். வயது சென்ற தந்தை, ஒரு தம்பி கோபு, மற்றும் பருவமடைந்த தங்கை சுசீலா முதலியவர்கள், அவன் சம்பளத்தைக்கொண்டே காலந்தள்ளவேண்டியவர்களாயிருந்தார்கள். அன்றாட ஜீவனமே நடப்பது கஷ்டமாக இருக்கும்போது - கோபுவின் படிப்புக்கு எங்கிருந்து பணம் கிடைக்கப் போகிறது. ஆனுலும் வெகு சிரமப்பட்டு காலேஜ் பீஸ் கட்டியும் மேற்கொண்டு படிக்க வசதியில்லாததால் படிப்பை நிறுத்த வேண்டியதாயிற்று.

கோபு பரந்த நோக்கம் கொண்டவன், விதியின்மேல் பழிபோட்டு விட்டு வீணே சோம்பித்திரிபவனல்ல.

ஒரு நாள் ரங்கன் ஆபீஸுக்குப் புறப்படும்போது அவர்களுக்கு தூரபந்துவான தாசில்தாரிடமிருந்து பெண்பார்க்க வரப்போவதாக கடிதம் வந்தது. வீட்டிலுள்ளவர்களுக்கே தாளம்போடும் நிலை. விருந்தினர்கள் - அதிலும் மேலான நிலையிலிருப்பவர்களை உபசரிப்பதெப்படி ரங்கனின் தந்தை சந்தோஷத்தினுல் - பெரிய இடத்து சம்பந்தம் கிடைக்கப்போகிறதென்னும் பெருமிதம் - தனயனை எப்படியாவது விருந்தினர்களை வரவேற்கவேண்டிய ஏற்பாடுகள் செய்யச்சொல்லுகிருர். ரங்கனுக்கு ஆபீஸுக்கு நேரம் ஆகிவிட்டபடியால் - மளிகைக் கடைக்காரனைக் கேட்டு வேண்டியவைகளை வாங்கிக்கொடுக்கும்படி கோபுவிடம் சொல்லிவிட்டுப்போகிருன்.

பழைய பாக்கியே கொடுபடாமலிருப்பதால் மேலும் ஒன்றும் தர முடியாதென்று சொல்லிவிடுகிருன் மளிகைக் கடைக்காரன். வருத்தத்தோடு வீடு திரும்பிய கோபு வீட்டுக்காரனின் குமாஸ்தா வாடகைக்கு நெருக்குவதைக்கண்டு அவனேடு வாதாடுகிருன். அதுசமயம் அங்கு வந்த தாசில்தார் தம்பதிகள் அவர்கள் நிலையறிந்து திரும்பி விடுகின்றனர்.

சுசீலா தண்ணீர் எடுக்க பக்கத்து பங்களாவுக்கு போய்வருவது வழக்கம். அந்த பங்களாவுக்கு சொந்தக்காரர் குருமூர்த்தி என்னும் சீமான். அவருக்கு ரவி என்ற ஒரே பிள்ளை. அன்றாட நிகழ்ச்சிகளை தனது டைரியில் குறித்து வைத்துக்கொள்ளுவது அவனுக்கு தவருத அலுவல். மாடி வராந்தாவிலிருந்தும், படிகளில் நின்றும், சுசீலாவைப் பார்த்து அவள் வனப்பில் மயங்கி காதல் கொள்ளுகிருன். சுசீலாவின் மனதிலும் காதல் செடி வளர்ந்து கனியாகிறது.

சுசீலா ஒருநாள் குழாயடியில் தண்ணீர்பிடித்துக்கொண்டிருக்கும் சமயம் காருக்கு தண்ணீர் கேட்க வருகிருன் ரவி. அதுமுதல் பழக ஆரம்பிக்கின்றனர். ரவியின் ''ப்ரண்டும்'' அவன் காதலி பப்பியும் சகாயம் செய்கின்றனர். ரவிக்கு சுபாவமாகவே மார்வலி உண்டு குடும்ப டாக்டரும் அவனுக்கு கல்யாணமே செய்யவேண்டாமென்று

சொல்லியிருக்கிறார், இருந்தும் கூட ரவிதன் பெற்றோர்களிடம் வாதாடி சுசீலாவை மணக்க ஏற்பாடு செய்கிறான். கல்யாண ஏற்பாடுகள் வெகு துரிதமாக நடைபெருகின்றன.

ரங்கனின் தந்தைக்கோ அளவிலாத ஆனந்தம். சுசீலாவுக்கோ மட்டற்ற மகிழ்ச்சி. ஆனால் அவள் தந்தை அந்த ஆனந்த அதிர்ச்சி தாங்காது இறந்து விடுகிறான்.

கல்யாண தினம்-பிரம்மாண்டமான கொட்டகைப்பந்தல் - ஏராளமான ஜனக்கூட்டம். கோபுவிற்கு மணமகனின் உடல் நிலை விபரம் தெரிகிறது. உடனே தன் தமயனிடம் ஓடி "இந்தக் கல்யாணம் நிறுத்தப்படவேண்டும்" என்கிறான். "இவ்வளவு தூரம் நடந்தபிறகு நிறுத்துவது அழகல்ல. சாத்தியமுமில்லை. அவர் விதிப்படி நடக்கட்டும்" என்று சொல்கிறான் தமயன் ரங்கநாதன். விதியின் மேல் நம்பிக்கையேயில்லாத கோபு ஓடோடிச் சென்று கல்யாண மண்டபத்தை அடைகிறான். என்னே விதியின் சதி !!!, மணமகளின் கழுத்திலே மங்கள சூத்திரத்தின் மூன்றாவது முடியையும் போட்டு முடிக்கிறான் மணமகன். கோபு அப்படியே அயர்ந்து நின்று விடுகிறான்.

வந்திருந்தோர்களின் ஆசீர்வாதத்துடன் திருமணம் இனிது நடந்தேறிவிடுகிறது. மணப்பந்தலில் வந்திருந்தோர் ஆனந்த மிகுதியால் ஒருவருக்கொருவர் முட்டிக்கொள்கின்றனர். மணமகன் ரொம்பவும் சிரித்ததன் விளைவாக உடனே மூர்ச்சையற்று விழுந்துவிடுகிறான். விரைந்தோடி வருகிறார் குடும்ப டாக்டர். பரிசோதித்து விட்டு, அவனுக்கு பரிபூர்ண ஓய்வு அவசியமென்றும், படுக்கையிலேயே இருக்கவேண்டும் என்றும் டாக்டர் சொல்ல, அவன் படுக்கையில் கிடத்தப்படுகிறான்.

இரவு நேரம் - ரவிக்கு தூக்கம் வராததால் தன் டைரியைப் புரட்டுகிறான். சுசீலாவுக்கும் மனக்கஷ்டத்தால் தூக்கம் வரவில்லை. பால் கனிக்கு வருகிறாள். ரவியும் தற்செயலாய் அங்கு வருகிறான். சுசீலா போய்ப்படுக்கச் சொல்லியும் கேளாமல் - அவள் தடுத்தும்கூட, அவள் அறையை அடைகிறான். என்ன சொல்லியும் கேளாமல் அவளை வற்புறுத்தி இணங்க வைக்கிறான்.

பிறகு தன் அறையை அடைந்து அந்த நிகழ்ச்சியையும் தன் டைரியில் குறித்து வைத்துவிட்டுப் படுக்கிறான் ஆயாசம் மிகுதியினால், படுத்தவன் தன் வாழ்க்கையின் இறுதியாத்திரையை மேற்கொண்டான். தங்கையின் நிலைக்காக ரங்கநாதன் படுந்துயரம் சொல்லி முடியாது.

கடும் பிரயாசையுடன் சுசீலா தன் மாமியார் வீட்டில் காலம் தள்ளுகிறாள். ரவியின் "ப்ரண்டு" தான் அடிக்கடி வந்து அவளுக்குத் தேறுதல் கூறிச்செல்கிறான்.

தன் கணவனின் ஒருநாள் சேர்க்கையிலேயே கர்ப்பிணியாகிறாள் சுசீலா. 2 மாதமாகிறது. விஷயம் வெளிவரவே ரவியின் சிநேகிதன் மேல் சந்தேகம் உதிக்கிறது. சுசீலா நடந்ததைக் கூற, யாரும் நம்பவில்லை. அவளைப் பலவாறு தூற்றி வெளியே விரட்டி விடுகின்றனர்.

அந்த சிசுவின் கதி என்ன? சுசீலா என்னவானாள்? ரங்கநாதனின் குடும்பத்தின் கதி யென்னவாயிற்று?

இவற்றிற்கு விடைகளை வெள்ளித்திரையில் காண்க.

(இதில் வரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே)

## Song No 1.

இயற்றியது:—மருதகாசி
சங்கீதம்:—C. N. பாண்டுரங்கம்

பாடியவர்:—ஜெயம்மா

**பல்லவி**

ஆதரி ஜெகதீஸ்வரி அம்பா!
—அருள் புரிந்து (ஆதரி)

**அநுபல்லவி**

ஆதி யாகி அந்தம் இல்லா
ஜோதியாக விளங்கும் தேவி!...... (ஆதரி)

**சரணம்**

பாதம் நாடி துதித்திடுவோர்
பவ வினைகள் தீர்க்கும் தாயே!
பாம்பணிந்து நடனம் ஆடும்
பரமன் பாதியான மாயே! (ஆதரி)

## Song No. 2.

இயற்றியது:—S. D. S. யோகி
சங்கீதம்:—C. N. பாண்டுரங்கம்

பாடியவர்:—M. L. வஸந்தகுமாரி, செல்லமுத்து

ஆண்: ஐயாவின் பெண்டாட்டிக்கு
எல்லா கலையும் தெரியணுமே!
நாட்டிய மாடத் தெரியுமா?
பாட்டு பாடத் தெரியுமா?

பெண்: ஓ...கதக்—பரத்—கதகளீ, மணிபுரீ
கூசி புடி நாட்டியங்கள்,
கர்நாடக் ஹிந்தி சங்கீதங்கள்
கலை அறுபது நாலுமே தெரியுமே!
—எனக்கு தெரியுமே!

ஆண்: இனியேன் செய்து கொள்வோம்
மணமே செய்து கொள்வோம்!

பெண்: ஓ லல்லல்லா, ஓ லல்லல்லா
ஓ...ஓ...ஓ லல்லா!
காலை யானது தீப மங்குது!
காரும் பஸ்ஸும் கதறி ஓடுது
கரம் காபி ரெடியானது!
எழுந்திரும் நாதா எழுந்திரும்!
அவசர மேனையா? ஆபீஸுக்குப் போக
அவசர மேனையா?
அடுப்பேத்தி உலையிலே
அரிசியைப் போடுவேன்!
ஓட்டல் டிபன் வேண்டாம்!
உடம்பு கெட்டுப் போகும்!
வீட்டு டிபன் கொஞ்சம்
வெயிட் பண்ணி கொண்டு போங்க!
கோட்டுக் கிஸ்திரி போட்டு
ஜோராக தந்திடுவேன்!
லேட்டானு என் மனைவி
ஆர்டிஸ்ட்டெனச் சொல்லுங்க!
மனை யாளும் நானே தான்
மனை யென்று விதுவேதான்
..................
நாதன் வந்திடும் நேரமானதே
வீட்டைக் கூட்டுவேன்!
விளக்கை ஏற்றுவேன்!
வாசனை வீசவே
தூபம் நான் போடுவேன்!
..................
பஞ்சணைக் கெழுந்தருளும்
பால் நிலவு காயுதே!
பரிமளம் பூசிடுவேன்;
பாலுடன் பழம் தருவேன்!
கொஞ்சிடும் வீணைமீட்டி
குஷியாக பாடுவேன்!
கண் வளரும் என் ஸ்வாமி.

ஆண் : அப்பப்பா உன் சங்கீதம் சகிக்கலே—இந்த
ஆட்டக் கலே சேஷ்டை யெல்லாம் புடிக்கலே.
எனக்கு புடிக்கலே!

பெண்: கலேகளெல்லாம் தெரிஞ்ச ஒரு
பெண்டாட்டியே கேட்டீரே!
நீரே கெட்டீரே!

ஆண் : போதும் போதும் இப்போ புத்தி வந்தது!
பழைய கால குடும்பப் பெண்போல்
நடந்துகொண்டால் போதுமே!

**Song No. 3.**

இயற்றியது:—மருதகாசி
சங்கீதம்:—பாண்டுரங்கம்
பாடியவர்:—P. லீலா

ஆசையே வீண் ஆனதே!
அரும்பாக கருகிப்போனதே...என் (ஆசை)
பாசத்தோடே ஆதரிப்பவர்
நாசங் காணவு மானதே!... (ஆசை)
வாச ரோஜா பதியம் வைத்து
வளர்த்த ஏழை வாழ்விலே
மலரைக் கண்ணில் காணு முன்னே
மடியும் நிலேயைப் போலவே
மாது எந்தன் தந்தை இந்நாள்
மண்ணில் மறையவும் நேர்ந்ததே!
துயர் சூழ்ந்ததே! (ஆசை)
என்ன வினைநான் செய்தேனே?
ஏது தலேயில் எழுதினனே?
எந்தன் வாழ்க்கை என்றும் இனிமேல்
இருளடைந்தே போகுமோ?
எண்ணம் யாவும் பகலில் காணும்
கனவைப் போலே ஆகுமோ?
நன வாகுமோ? (ஆசை)

**Song No. 4.**

இயற்றியது:—மருதகாசி

சங்கீதம்:—G. ராமநாதன்

பாடியவர்:—ராணி, கஸ்தூரி & பார்ட்டி

பெண் வீட்டார்:—

சோப்பளாங்கி மாப்பிள்ளேக்கு
கூட்டும் கோட்டும் வேணுமா?
சொர்ணத் தங்கம் போலே ஒரு
பெண்ணும் கூட வேணுமா?
தோப்புக் கர்ணம் போடப் போருர்
இந்த மாப்பிள்ளே!
ஆட்டி வைத்துப் பார்க்கப் போருள்
கொஞ்ச நாளிலே—பெண்ணும்
ஆட்டி வைத்துப் பார்க்கப் போருள்
கொஞ்ச நாளிலே!.......................... (சோப்)

பிள்ளே வீட்டார்:—

நாகரீகம் அறிந்திடாத
காட்டுப் புறம் தன்னேயே
காட்டுப் பெண்ணைக் கொண்டு விட்டோம்!
செண்டு ஆடத் தெரியலே!
தின்று விட்டுத் தூங்க இந்த
மண்டு தேவலே!
இன்னமாக மாப்பிள்ளேக்கு
ஏற்ற பெண்ணில்லே.......................... (நாகரீ)

பெண்வீட்டுக் கிழவி:—

### தொகையரு

சப்பைக் கால் வீரரம்மா!
சப்பை மூக்குக் காரரம்மா!
ஏப்பம் வரத் தின்பதிலே—இந்த
மாப்பிள்ளை சூரரம்மா!

### பாட்டு

தில்லு முல்லுக் காரர்! வாய்வீரர்!
இந்த மாப்பிள்ளே!
செத்த பாம்பை அடித்துக் கொல்லும்
சிங்கக் குட்டி ஆண்பிள்ளே!
எல்லாரையும் குல்லாப் போட
எத்தர் இவர்க்கீடில்லே!
இளிச்ச வாயர்! புளிச்சக் கண்ணர்!
ஒங்க மாப்பிள்ளே!

பிள்ளைவீட்டுக்கிழவி:—

### தொகையரு

கோட்டானின் குரலோடு,
குண்டு சட்டி உடலோடு,
காட்டேறி போலே நம்ம
நாட்டுப் பெண் வாச்சுதம்மா!

பாட்டு

ஆந்தை முழி! யானைத்தலை!
காணவுமே சகிக்கலே!
அமாவாசை இருளைப் போலே!
இந்தப் பெண்ணு நிறத்திலே!
பேந்தப் பேந்த முழிக்குதம்மா!
பித்துக் கொள்ளி சும்மா!
பாந்த மில்லா ஜோடி இந்த
சிங்கப் பல்லி தானம்மா!

பிள்ளைவீட்டுக் குழந்தை:

அழவேணும் எங்க அண்ணு
அல்வா வாங்கித் தருவார்!

பெண்வீட்டுக் குழந்தை:

உம்...யாருமில்லா நேரம் பார்த்துக்
காலில் கூட விழுவார்!

பாட்டிமார்கள்:

சீதையுடன் ஸ்ரீராமன் சேர்ந்தினிது வாழ்ந்த
சீராக மணமக்கள் நீடுழி வாழ்க!
பதினாறும் பெற்றிங்கு பெருவாழ்வு முற்று
பகையின்றி துயரின்றி பலகாலம் வாழ்க!
ஜெயமங்களம்! நித்ய சுப மங்களம்!

## Song No. 5

இயற்றியது:—மருதகாசி

சங்கீதம்:—பாண்டுரங்கம்

பாடியவர் :—ராஜா

(தொகையறு)

இன்பமோ! துன்பமோ! எதுவுமே நில்லாதே!
இதே...இயற்கை நியதி!

பாட்டு

நம்

ஜீவியக் கூடு! களிமண் ஓடு
ஆசையோ மணல் வீடு!

நம்

ஆசையோ மணல் வீடு!
சுக வாழ்வு தான் நாடு வோம்!
துயர் சூழ்ந்து நாம் வாடு வோம்! (நம் ஜீவிய)

தவறுகள் அதிகம் செய்வோம்!
தலை விதியென நாம் கொள்வோம்!

சொல்லும்

தைரியம் இழந்து வீணே

நாம்

சமூக அடிமைகளா வோம்!................(நம் ஜீவிய)
தூற்றிடும் உலகமே—நமைப்
போற்றுதல் சகஜமே!—மனம்
சோராதே எதிலுமே!

தோல்வி கண்டு அதை எண்ணி வீணிலே
சோக பிம்ப மாகாதே!
மனமே நோகாதே! காலம்
மாறும் மறவாதே

**Song No. 6.**

இயற்றியது— மருதகாசி

சங்கீதம்:—பாண்டுரங்கம்

பாடியது:—ஜெயம்மா

தீராத வறுமையுடன் போராட வந்தவளே
மாறாத துயர்தீர்க்கும் மருந்தே நீ கண்வளராய் (மா)
காணாத காட்சியெல்லாம் காணவே வந்தாயோ?
கனிவாக ஔவையைப்போல் கவிபாட வந்தாயோ?
தவம் செய்யும் தனவான்கள் மகளாய் நீபிறவாது
தாளாத தொல்லைக்கே ஆளாகப் பிறந்தாயே!
புவிமீது கவலை ஏதும் அறியாத கண்மணியே!
சுவையூறும் செங்கரும்பே! சுகவாழ்வின் நல் அரும்பே!

**Song No. 7.**

இயற்றியது:—மருதகாசி

சங்கீதம்:—நாகய்யா

பாடியவர்:—நாகய்யா

உள்ளம் : ஏ மனிதா! எங்கே ஓடுகிறாய்?...நீ

எங்கே ஓடுகிறாய்?
வறுமை இருளால் வழிதடு மாறி
மதிமயங்கி குருடனைப் போலே எங்கே ஓடுகிறாய்?

உருவம் : வறுமையின் உருவம்! பூமிக்கு பாரம்!
வாழ்ந்தென்ன சாரம்? ஓடிப்போகிறேன்!

குழந்தை: [எங்கே அப்பா]

உள்ளம் : வாழ்வினைப் பயனை வென்றதாரடா?
உன் நிழல் உன்னைப் பிரிந்திடுமோடா?

குழந்தை: [பிள்ளை யாரப்பா]

உருவம் : மண்ணில் பிறந்த மனித பொம்மை நாம்
மண்ணுடன் மண்ணாய் கலப்போம் ஒருநாள்

குழந்தை: [பூஜை செய்யணும் அப்பா]

உருவம் : நாளும் கிழமையும் நலிந்தவர்க்கேது!
நலம் பெற உலகில் மரணமே தோது!

உள்ளம் : வாழ்வதற்கே தான் பிறந்தாய் உலகில்!

உருவம் : வாழ்வ தெவ்விதம் எந்தன் நிலையில்?

உள்ளம் : பொறுமை வேண்டும்!

உருவம் : பொறுத்தது போதும்!

உள்ளம் : உலகைப் பார்!

உருவம் : நரகம் தான்!
நரகம்! நரகம்! நரகம்!!

**Song No. 8.**

இயற்றியது:—மருதகாசி
சங்கீதம்:—பாண்டுரங்கம்
பாடியவர்:—M. L. வஸந்தகுமாரி

டான்ஸ் பேபி டான்ஸ்!
இந்த வாழ்வும் ஒரே சான்ஸ்!

இளமை அழகில்
இருவர் மனமும்
இணையும் நாளே ரொமான்ஸ்! (டா)

காற்ருய் பறக்கும் காலம்!
கரையும் இளமைப் பருவம்!
தங்காது உனக்காக!
தருணத்தை இழக்காதே!... (டா)

காலை வேளையில் மலரும் ரோஜா!
மறுநாள் காலை உலரும் ராஜா!
நாளையை நம்பி அழியாதே—முன்
நாளை நினைந்து வருந்தாதே!... (டா)

இன்பம் தன்னை தருவதும் காலம்!
துன்பம் தொடரச் செய்வதும் காலம்!
காலம் கருணை மாறும் முன்னே
கனவாய் வாழ்க்கை தேயும் முன்னே... (டா)

---

# நடிகர்கள்

| | | |
|---|---|---|
| V. நாகையா | .... | குமாஸ்தா ரங்கனாதன் |
| மனோஹர் | .... | தம்பி கோபு |
| P. V. நரசிம்ம பாரதி | .... | ரவி |
| ப்ரண்ட் ராமசாமி | .... | ரவியின் ப்ரண்ட் |
| T. N. சிவதாணு | .... | ரவியின் தகப்பன் |
| M. L. N. கௌசிக் | .... | சங்கர் |
| C. V. V. பந்துலு | .... | சங்கரின் தகப்பன் |
| T. V. சேதுராமன் | .... | ப்ரண்டின் தகப்பன் |
| V. K. சார்த்திகேயன் | .... | ஹார்மோனியக்காரன் |
| கருப்பையா | .... | ஜோஸியர் |
| P. சுந்தரபாஷியம்நாயுடு | - | ரங்கனாதன் தகப்பன் |
| பாலன் | .... | குப்தா |
| V. T. கல்யாணம் | .... | வீட்டுக்காரரின் குமாஸ்தா |
| பைரவன் | .... | ரங்கனாதன் மகன் (பெரியவன்) |
| P. கல்யாணம் | .... | ஷ சிநேகிதன் |
| அனில் குமார் | .... | ஷ (சிறு வயதில்) |
| பண்டரிபாய் | .... | ரங்கனாதன் தங்கை சுசீலா |
| ஜயம்மா | .... | சீதா |
| C. K. சரஸ்வதி | .... | ரவியின் தாய் |
| M. சரோஜா | .... | பப்பி |
| மேனகா | .... | ராணி |
| அங்கமுத்து | .... | பால்காரி |
| வேணுபாய் | .... | சங்கரின் தாய் |
| பேபி உமா | .... | சீதாவின் மகள் |

மற்றும் பலர்

FILMS LTD

RELEASE

ரைவில் வெளிவருகிறது:

# பணக்காரி

தமிழ்